# 12 அபுநவாஸின் குறும்பு

அபுநவாஸ் என்பவன் ஒரு அரசசபைக் கோமாளி, அவன் வேடிக்கைப் பேச்சுக்கள் பேசுவான். வேடிக்கைச் செயல்கள் புரிவான். அவனது வேடிக்கைப் பேச்சுக்களாலும் செயல்களாலும் அரசனும் சபையோரும் மகிழ்வார்கள். அதனால் அரசனுக்கு அவனிடம் அதிக அன்பு உண்டு.



ஒரு நாள் அபுநவாஸ் அரசனிடம் சென்றான். அரசனைக் கண்டதும் விம்மி அழத் தொடங்கினான்.

“ஐயா! மகாராசாவே, என் மனைவி இறந்துவிட்டாள்" என்று கதறி அழுதான்.

அரசன் அவன் மீது மிகவும் இரக்கப்பட்டான். பெருந்தொகைப் பணத்தைக் கொடுத்து அனுப்பினான். இந்தச் சம்பவம் அரசிக்குத் தெரியாது. அபுவாஸின் மனைவியும் அரசியிடம் போனாள். தலைவிரிகோலமாக நின்று அழுது புலம்பினாள். “ஐயோ! மகாராணியே, என் கணவர் இறந்துவிட்டார். இனி நான் என்ன செய்வேன்" என்று கதறினாள். அரசி அவளுக்குப் பெருந்தொகைப் பணத்தைக் கொடுத்து அனுப்பினாள். இந்தச் சம்பவம் அரசனுக்குத் தெரியாது. பின்பு அரசன் அரசியிடம் சென்றான். அரசனைக் கண்டதும் அரசி “கேட்டீர்களா செய்தியை! நம் அபுநாவாஸ் இறந்து விட்டானாம்" என்றாள்.

அதைக் கேட்ட அரசன், “இல்லை, இல்லை! அபுநவாஸ் இப்பொழுது தான் வந்து விட்டுப் போகின்றான். அவனுடைய மனைவி தான் இறந்து விட்டாளாம்" என்று கூறினான். அரசிக்கோ ஒன்றுமே விளங்கவில்லை. “அப்படி இருக்காது" சற்றுமுன் தான் அவள் என்னிடம் வந்துவிட்டுப் போனாள். அபுநவாஸ் இறந்து விட்டதாக அவளே என்னிடம் சொன்னாள்" என்று கூறினாள்.

என்ன நடந்தது என்பதை அறிவதற்காக அரசனும் அரசியும் அபுநவாஸின் வீட்டுக்கு நேரில் சென்றார்கள்.

என்ன ஆச்சரியம்! அங்கே அபுநவாஸும் அவனது மனைவியும் இறந்து கிடந்தார்கள். இதில் ஏதோ தந்திரம் இருக்க வேண்டும் என அரசன் எண்ணினான். சிறிது நேரம் யோசித்தான். அவர்களுக்கு அருகே சென்றான் “இவர்கள் இருவரில் யார்

முதலில் இறந்தார்கள்? தெரியவில்லையே! தெரிந்தால் அவருக்கு ஆயிரம் பொற்காசு பரிசு கொடுக்கலாமே" என்று உரத்த குரலில் கூறினான்.

அதைக் கேட்டதும் அபுநவாஸ் துள்ளி எழுந்தான். “நான் தான் முதலில் இறந்தேன், அரசே, காசைத்தாருங்கள்" என்றான்.

“இல்லை, இல்லை! நான் தான் முதலில் இறந்தேன். அரசே, காசை எனக்குத் தாருங்கள்." என்று மனைவியும் எழுந்தாள்.

அரசனும் அரசியும் தாங்க முடியாமல் சிரித்தார்கள். “இப்படியாகவா கோமாளித்தனம் செய்வது? பணம் வேண்டுமென்று கேட்டால் நாங்களே தந்திருப்போம் தானே" என்று அரசன் அவர்களைச் செல்லமாகக் கோபித்தான்.

**சிரித்து வாழ வேண்டும் ~ பிறர் சிரிக்க வாழ வேண்டாம்.**
**සිනාසී ජීවත් වෙන්න.**
**අනුන්ගේ සිනාවට ලක්වන ලෙස ජීවත් නොවෙන්න.**

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| அரச சபை | - | රාජ්‍ය සභාව |
| கோமாளி | - | විකටයා |
| வேடிக்கைப் பேச்சு | - | විකට කතා |
| இரக்கம் | - | කරුණාව |
| மகிழ்ச்சி | - | සන්තෝසය |
| இறப்பு | - | මරණය |
| பெருந்தொகை | - | විශාල ප්‍රමාණයක් |
| சம்பவம் | - | සිද්ධිය |
| தந்திரம் | - | උපාය |
| யோசனை | - | අදහස |
| தலைவிரிகோலம் | - | අවුල් වූ හිස කෙස් |



### செயற்பாடு 01

பாடப்பகுதியைச் சரியான உச்சரிப்புடன் உரத்து வாசிப்போம்.



## செயற்பாடு 02

**பாடத்தைப்படித்து பின்வருவன சரியாயின் '✓' எனவும் பிழையாயின் '✗' எனவும் அடைப்புக்குள் குறியிடுவோம்.**
**පාඩම කියවා පහත සඳහන් දෑ හරි නම් '✓' ලකුණත් වැරදි නම් '✗' ලකුණත් වරහන් තුළ යොදමු.**

---

(அ) அபுநாஸ் ஒரு அரச சபைக்கோமாளி. (................)

(ஆ) அவனது பேச்சுக்களாலும் செயல்களாலும் அரசனும் சபையோரும் கோபப்படுவர். (................)

(இ) அபுநவாஸ் அரசனிடம் விம்மி அழுதான். (................)

(ஈ) அரசன் அவனுக்குப் பெருந்தொகைப் பணத்தைக் கொடுத்து அனுப்பினான். (................)

(உ) அபுநவாஸ் இறந்துவிட்டார் என அவனது மனைவி கதறி அழுதாள். (................)

(ஊ) அபுநவாஸின் மனைவிதான் முதலில் இறந்து போனாள். (................)

(எ) அபுநவாஸும் அவனது மனைவியும் இறந்தது போல நடித்தார்கள். (................)

(ஏ) நூறு பொற்காசுகள் பரிசு கொடுப்பதாக அரசன் அறிவித்தான். (................)

(ஐ) பணத்துக்காக அபுநவாஸும் அவன் மனைவியும் உண்மையாக இறந்து போனார்கள். (................)

(ஒ) அவர்களை அரசன் பாராட்டினான் (................)



## செயற்பாடு 03

**பின்வருவனவற்றை இணைத்துப் பொருத்தமான வாக்கியமாக்கி உரத்து வாசிப்போம்.**
**පහත සඳහන් වචන ගළපා වාක්‍ය සාදමු. හඬ නගා කියවමු.**

| | | |
|---|---|---|
| நீ | இங்கே | வா! / போ<br>நில்! / ஓடு<br>விளையாடு! / குதி |
| சில்வா | அங்கே | |

(4) **பின்வரும் வினா வாக்கியங்களை அறிந்து கொள்வோம்.**

(அ) 1. ஆசிரியர் வருகின்றாரா?
2. நீ சாப்பிடுகிறாயா?
3. உனக்குத் தெரியுமா?
4. உனக்குப் பாடத் தெரியுமா?
5. உனக்கு எழுதத் தெரியுமா?
6. உன்னால் வாசிக்க முடியுமா?

(ஆ) 1. நீ ஏன் வரவில்லை?
2. ஆசிரியர் ஏன் அடித்தார்?
3. நீ கோயிலுக்கு ஏன் போகவில்லை?
4. கமலா ஏன் அழுகின்றாள்?

## அடை மொழியை அறிந்து கொள்வோம்

**உரத்து வாசிப்போம். හඬ නගා එකතු ව කියවමු.**

**1. பெயர் அடைமொழி:**

நல்ல மாணவன் சிறந்த மாணவி

சுவையான சாப்பாடு பயனுள்ள புத்தகம்

சிறிய வீடு பெரிய மாளிகை

அழகான சித்திரம் நீளமான வீதி

குட்டை மனிதன் ஒல்லியான பெண்

தடித்த ஆண் வட்டமான மேசை

**2. வினை அடைமொழி:**

வேகமாக வா! வெறுப்புடன் பேசினான்.

கவர்ச்சியாக நடித்தான். மெதுவாகக் குடித்தான்.

கடுமையாகத் தண்டித்தான். கவனமாகப் படி.

கவலையுடன் அலைந்தான். அவதானமாக நில்.

உற்சாகத்துடன் விளையாடு.

சந்தோசமாகப் பாடினான்.

## செயற்பாடு 04

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் கூறுக.**
**පහත සඳහන් වාක්‍ය සිංහලෙන් කියන්න.**

1. ஆசிரியர் வருகிறாரா?

   ......................................................................................

2. உனக்குப் பாடத் தெரியுமா?

   ......................................................................................

3. கமலா ஏன் அழுகிறாள்?

   ......................................................................................

4. கமலன் ஏன் சிரிக்கிறான்?

   ......................................................................................

5. நீ நன்றாகச் சாப்பிட்டாயா?

   ......................................................................................

## செயற்பாடு 05

கதையில் வரும் பாத்திரங்களை நடித்துக் காட்டுவோம்.



## செயற்பாடு 06

**பின்வரும் காலங்களை நிரப்புவோம்.**

**දී ඇති කාලයට ගැළපෙන ක්‍රියා පද යොදා හිස්තැන් පුරවන්න.**

| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|
| பேசினேன் | பேசுகிறேன் | பேசுவேன் |
| ................................ | ................................ | சாப்பிடுவேன் |
| குடித்தேன் | ................................ | ................................ |
| பெற்றார் | ................................ | ................................ |
| போனேன் | ................................ | ................................ |